# கல்முனை ஆதார வைத்தியசாலை
## வரலாற்றில்
### சில குறிப்புகள்



கட்டுரையாசிரியர்

**எஸ்.ஏ.ஐ.மத்தியு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| Name of the Book | : | Base Hospital, Kalmunai. |
| Author | : | Mathew Sandanam |
| | | Anthonymuthu Iruthayam |
| Copyright | : | Author |
| Edition | : | 1st Edition (15-12-2013) |
| Pages | : | 20 |
| Paper | : | 70gsm |
| Copies | : | 200 |
| Price | : | 50.00 |
| Printed at | : | Golden Offset Printers, Kalmunai. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இக்கைந்நூல் பற்றி...

ஒரு நிறுவனம் இரு வாரக் காலத்திற்குள் கல்முனை ஆதார வைத்தியசாலையின் வரலாறு பற்றி ஒரு கட்டுரை தருமாறு வேண்டிக்கொண்டது.

இக்கட்டுப்பாட்டுக்குள் அடங்கி தகவல்கள் சேகரிக்கப்பட்டன. ஆனால் கல்முனை ஆதார வைத்தியசாலை பற்றி மெதடிஸ்த மிஷன் வரலாறுகளை தோண்டவும் கத்தோலிக்க கன்னியாஸ்திரிகளின் ஆங்கிலேய பிற்கால ஆரம்ப வரலாறுகளையும் இன்னும் பல வைத்தியர்கள் நலன் புரிச் சங்கத்தினர், தனிநபர்கள் ஆகியோரின் பங்களிப்பையும் வருங்கால ஆய்வாளர்கள் தோண்டியெடுக்க இச்சிறுநூல் ஒரு ஆதார ஆவணமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

நூலாசிரியர்
**எஸ். ஏ. ஐ. மத்தியு**




பாண்டிருப்பு மலர்ச்சி சனசமூக நிலை[illegible]
பொது நூலகம்
பதிவு இல.
AM/CC/[illegible]
02-10-1[illegible]
1635
பாண்டிருப்பு, கல்[illegible]



Bro.S.A.I.Matthew,
159, SSJ Lane,
Kalmunai.
Sri Lanka.


2014-11-24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது கருத்துரை...



நான் கல்முனை ஆதார வைத்தியசாலையில் 1990 முதல் 2003 வரை ஓர் சிரேஸ்ட ஆண் தாதிய உத்தியோகத்தராகக் கடமை புரிந்தேன். எனது வசிப்பிடம் நற்பிட்டிமுனை. நான் பாத்திமா கல்லூரியில் அதி உன்னத துறவற ஆசிரியர்களிடம் கல்வியைப் பெற்றுக்கொண்டமை இன்றும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

அருட்சகோதரர் எஸ்.ஏ.ஐ.மத்தியு அவர்கள் கல்முனை ஆதார வைத்தியாசாலை பற்றிய பழைய தகவல்களை தந்துதவுமாறு கேட்டார். என்னைப்பற்றி அறிந்து வைத்திருக்க வேண்டும். நான் கொடுத்த தகவல்கள் பல அவருக்கு பிரயோசனமானவையாக இருந்திருக்க வேண்டும். அவை இச்சிறு நூலில் ஆங்காங்கே தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றன.

இது சிறு நூலேயாயினும் பல வரலாற்றுத் தகவல்களை எதிர்காலச் சந்ததியினருக்கும் கல்முனையின் வரலாற்றை ஆய்வு செய்பவர்களுக்கும் துணை செய்யும் என்பது எனது ஆழ்ந்த நம்பிக்கை. இச்சிறு நூல் மூன்று முக்கிய விடயங்களை எனக்கும் வாசகர்களுக்கும் அறிவுறுத்தி நிற்கின்றது.

ஒன்று : மெதடிஸ்த மிசனறிமாரே 18ம் நூற்றாண்டின் முன் அரைப்பகுதியில் மேற்கூறிய வைத்தியசாலைக்கு அத்திவாரமிட்டனர் என்பது.

இரண்டு: கத்தோலிக்க கன்னியாஸ்திரிகள் மாந்தீவில் குஸ்டரோக வைத்தியசாலையை அமைப்பதற்கு முன்னர், கல்முனையில் குஸ்டரோக வைத்திய நிலையத்தை மேற்படி வைத்தியசாலையோடு நடாத்தினர் என்பது.

மூன்று : பின்னர் திரு.ப.நல்லையா என்ற அமைச்சரே வைத்தியசாலைக்கு பல விடுதிகளை அழைத்தார் என்பது சுட்டிக்காட்டுகின்றது என்பது.

இச்சிறு நூலை ஆழ்ந்த சிந்தனையுடன் வாசிப்போர் நன்றியுடன் உணர்வர்.

1909இல் இடப்பட்ட நடுகல் திரு.ப.நல்லையாவின் காலத்திற்கு முன்னரே ஒரு முக்கிய சம்பவம் நடைபெற்றது என்பதை சுட்டிக் காட்டுகின்றது. இது ஆங்கிலேயரின் ஆட்சிக்காலம் என்பதை நாம் நடு கல்லோடு எண்ணிப்பார்த்து மேலும் ஆய்வு செய்ய வேண்டும் என்பதை நூலாசிரியர் சூசகமாக சுட்டிக் காட்டுகின்றார். கார்மேல் பாத்திமாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் இந்நூலாசிரியர் அருட்சகோதரர் எஸ்.ஏ.ஐ.மத்தியு அவர்கள் இந்நூலிற்கு கருத்துரை வழங்குமாறு பணித்தமைக்கு நான் பெரிதும் நன்றி கூறுகின்றேன். அன்னாரது சமூக சேவைகள் நீடிக்க இறைவன் துணை புரிவாராக.

– நன்றி –

10-12-2013

சுப்பிரமணியம் நடராசா

| சேவைத் தளங்கள்: | |
|---|---|
| போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம் | மாவட்ட வைத்தியசாலை - சம்மாந்துறை |
| ஆதார வைத்தியசாலை - அம்பாறை | ஆதார வைத்தியசாலை - கல்முனை |
| | சுற்றயற்கூறு - மத்தியமுகாம் (ஓய்வு) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை ஆதார வைத்தியசாலை


## அருட்திரு எஸ்.ஏ.ஐ. மத்தியூ

(முன்னை நாள் கல்முனை ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபைச் செயலாளர்)


*ஆரம்பம் :*




1880களில் குறிப்பாக 1882 காலப் பகுதிகளில், ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கலாம் என்பதற்கு ஆதாரங்கள் காணமுடியும்.

இக்காலப் பகுதியில் இவ்வைத்தியசாலையின் முதல் மருத்துவராக, யாழ்ப்பாணம் உடுவிலைச் சேர்ந்த டாக்டர் முருகேசு செல்லப்பா R.M.P. அர்ப்பணிப்புடன் சேவையாற்றினார்.

*குறிப்பு:*

வைத்தியசாலை வரலாற்றில் ஒரு முக்கிய சம்பவம் நிறைவேற்றப்பட்டதை; இன்றளவும் நிலை நிற்கும் மேற்படி கொங்கிறீற்றிலான அடிக்கல் நினைவுச் சின்னம் காட்டி நிற்கின்றது.

இந்த வைத்தியசாலையின் நிலப்பரப்பு முற்பகுதி கல்முனை - மட்டக்களப்புப் பிரதான பாதையின் மேற்குப் புறத்தில் தற்சமயம் M.O.H .ஒழுங்கையை அடுத்துள்ள நிலப்பரப்பும் கார்மேல் பாத்திமாக் கல்லூரி பெண்கள் பிரிவுக்கு அடுத்துள்ள மணற்சேனைக்குச் செல்லும் பாதைக்கு அடுத்துள்ள பெரும்பகுதி நிலப்பரப்பாகும். பிற்பகுதி நிலப்பரப்பு, தற்காலம் சொர்ணம் டூரிஸ்ட் இன் எல்லையிலிருந்து (இது 1978 சூறாவளிக்கு முன்பு S.S.J. சகோதரர்களுக்குச் சொந்தமாக இருந்தது). தற்கால வைத்தியசாலைக் காணியை உள்ளடக்கியதாகும். வைத்திய சாலையின் பிற்பகுதி பிரேதப் பரிசோதனைக்காகவும் (Mortuary) ஒதுக்கப்பட்டிருந்தது. மேற்கூறிய இரு நிலப்பரப்புகளிலும் முறையே கடைகளும், வீடுகளும் குடிபுகுந்து விட்டன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் டாக்டர் முருகேசுப் செல்லப்பா, R.M.P. காலமான போது பொதுமக்கள் அவரது சடலத்தை யாழ் கொண்டு செல்ல விடாது மணற்சேனை சேமக்காலையில் நல்லடக்கம் செய்தனர். மக்கள் சிலர் மேலும் ஆர்ப்பாட்டம் செய்து வைத்தியசாலை வளவில், வைத்தியசாலையின் முன்னால் பிரதான வீதிக்கு அருகாமையில் மிகுந்த மரியாதையுடன் நல்லடக்கம் செய்து கல்லறையும் கட்டினர். அக்கல்லறை கால வெள்ளத்தில் அழிந்து நிலத்திற்கு மேல் சிறிது தலையை நீட்டிக் கொண்டு நின்றது. அதை மீளவும் கட்ட முயற்சிகள் பல (கட்டுரை ஆசிரியர் உட்பட) எடுத்த போதும் அது சாத்தியமாகவில்லை. தற்போது கல்லறையின் மேல் கடையொன்று நிற்கிறது.

வைத்தியரின் பிரேதம் இரு முறை அடக்கம் செய்யப்பட்டது சாதாரண விடயமல்ல. வைத்திய சேவை மக்கள் சேவையாக இருந்தது என்பதை நமக்கு மிகத் தெளிவாக உணர்த்துகிறது.

**அக்கால குடிப்பரப்புகளும், வைத்தியசாலையின் சேவை எல்லைகளும் :** கல்லோயா நீரத் தேக்கமும் D.S. சேனாநாயக்காவின் குடியேற்ற கொள்கைக்கு முன்னைய காலப் பகுதியில் தமிழர் குடியிருப்புகளின் எண்ணிக்கையையும், செல்வாக்கையும் அம்பாறையில் நிலை கொண்டு நிற்கும் மிகப் பழைமையை சுட்டிக் காட்டும் பிள்ளையார் ஆலயமாகும்.

முன்னைய சம்மாந்துறைப்பற்றின் எல்லையும் இக்கினியா வரையும் தீகவாப்பி வரையில் அகன்றிருந்தன. தீகவாபி பிரதேசத்தில் 10 விரல்களினால் எண்ணக் கூடிய சிங்களக் குடும்பங்கள் தமிழர்களோடும், முஸ்லிம்களோடும் நல்லுறவைப் பேணி வாழ்ந்து வந்தன.

எனவே 19ம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து 20 நூற்றாண்டின் நடுப்பகுதி வரையான காலத்தில் கல்முனை வைத்தியசாலையே அம்பாறை, திகவாவி பிரதேசம் முதல் தெற்கே பொத்துவிலிலிருந்து வடக்கே குருக்கள்மடம் வரையும் மண்டூர், மத்திய முகாம், சொறிக்கல்முனை முதலான பிரதேசங் களிலிருந்தும் வந்த சகல இன நோயாளிகளுக்கும் வைத்திய உதவியை அளித்து வந்த பழம்பெரும் வைத்தியசாலை இதுவென குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக வாழச்சேனையிலிருந்தும் இந்த வைத்தியசாலையின் சிறப்புப் பணி கருதி நோயாளிகள் வந்தனர். கல்லோயா நீர்த்தேக்கமும், புதிய கொலனிகளும் வந்த பின்னர் ஆங்காங்கே வைத்திசாலைகள் உருவெடுத்தும், தேவைக்கேற்ப வசதிகள் அளிக்கப்பட்டும் வளர்ச்சிகள் அடைந்து வந்துள்ளன என்பதை வரலாற்று ஏடுகள் நிருபித்து நிற்கின்றன.


நல்லையா, எம்.பி.

1962ம் ஆண்டு இவ்வைத்தியசாலை ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டது. ஆனால் கடந்த 48 வருடங்களாக அல்லது அரை நூற்றாண்டு காலமாக ஆதார வைத்தியசாலை என்ற நாமப் பலகையை தாங்கி வருவது அரசியலாளர்களுக்கு ஏற்புடைத்தா என்று மக்கள் வினாவுகிறார்கள். அரசின் இந்தப் பாராமுகத்திற்கு வேறு காரணங்கள் இருக்க முடியுமா என்பது அலசிப் பார்க்க வேண்டியவையாகும். ஒரு சில காரணங்களை முன்வைக்கலாம்.

1956ம் ஆண்டளவில் S.L.F.P. யும், அதன் கூட்டணிக் கட்சிகளும் வெற்றி பெற்றமை அரசியல் வரலாற்றில் குறிப்பிடக் கூடிய மைல்கல் எனலாம். 1947ம் ஆண்டு அரசியலைக் கைப்பற்றிய U.N.P.யின் பலம் குன்றிய நிலையில் தமிழ் காங்கிரஸ் கட்சி தமிழ் காங்கிரஸ் எனவும், சமஷ்டிக் கட்சி எனவும் பிரிந்தமை நாட்டிலும், அம்பாறை - கல்முனை பிரதேசங்களிலும் பல பிரிவினைகளைக் கொண்டு வந்தது.

1978ம் ஆண்டு 2ம் ஜனநாயக சோசலிச குடியரசின் யாப்பில் இலங்கை பல மாவட்டங்களாக பிரிக்கப்பட்டதோடு, அம்பாறை மாவட்டம் அம்பாறையை தலைநகராக்கிக் கொண்டது. மாவட்ட அமைச்சர்கள் உருவானார்கள்.

இதே யாப்பு விகிதாசார பிரதிநிதி முறையையும் அறிமுகம் செய்து வைத்தது. அந்த அடிப்படையில் ஒவ்வொரு கட்சியும் / சுயேட்சைக் குழுவும் 09 பேரை தேர்தல் களத்தில் இம்மாவட்டத்தில் நிறுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேட்பாளர்கள் வெற்றி இலக்கை அடைவதற்கு குறிப்பிட்ட தொகை வாக்குகளைப் பெறவேண்டி இருந்தமையால் தமக்கென வாக்கு வங்கிகளை உருவாக்கினா. சிற்சில இடங்களை உருவாக்கி மேலதிக வாக்குகளைப் பெறுவதற்காக கிராமங்களைத் தேடத் தொடங்கினார்கள். இதனால் வெவ்வேறு பிரதேசங்களில் தேவைக்கு அதிகமாக வளங்கள் அளிக்கப்பட்டதோடு, நிதி ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்பட்டன. இது ஒரு காலத்தின் தேவையாகும். இதனால் கல்முனை ஆதார வைத்தியசாலை 1962ம் ஆண்டு பெயர்ப்பலகையை தக்க வைத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. எனினும் அம்பாறை மாவட்ட அமைச்சர் P. தயாரத்தன சுகாதார அமைச்சராக இருந்த வேளை கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு கட்டிடங்களைக் கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடுகளை செய்திருந்தார்.

## பௌதீக வளங்கள் மட்டும் ஒரு நிறுவனத்தின் தரத்தையும், பொது மக்களின் அங்கீகாரத்தையும் பெற்றுக் கொள்ளுமா?

தற்காலத்தில் M.O.H. ஸ்தாபனம் வைத்தியசாலைக்குச் சமாந்தரமாக நோய்த் தடுப்புப் பிரிவாக இயங்கி வருகிறது. இதே போன்று 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் ஒரு ஸ்தாபனம் இயங்கி வந்துள்ளது. 1889ல் சிறிய டிஸ்பென்சரி இயங்கியது. அதை ஒரு ஓவசியர் (Overseer) பரிபாலனம் செய்தார். வீடு வீடாகச் சென்றும் (Field Work) சேவையாற்றினார்.

முதலாவது ஓவசியர் திரு. பத்தலோமியஸ் ஆவார். இவர் ஒரு பறங்கி இனத்தவராக இருந்திருத்தல் வேண்டும். துறை நீலாவணைப் பெண் ஒருவரைத் திருமணம் செய்து இங்கு வாழ்ந்தார். அம்மைப்பால் தடுப்பு மருந்து மூலம் அம்மை நோயைகப் கட்டுப்படுத்தும் பணி இவரின் முக்கிய மக்கள் சேவையாகும். திரு. பத்தலோமியஸ் (Mr. Barthalomeus) டாக்டர் வில்லியம் தோமசின் அப்பம்மாவின் அப்பாவாவார். அக்காலத்தில் மகப்பேற்று உதவிக்காக மருத்துவிச்சிகள் வெளியிலிருந்து வருவார்கள்.

1882ல் தற்போதையக் கல்முனை ஆதார வைத்தியசாலை குஷ்டரோக வைத்தியசாலையாகவும் இருந்தது. கிறிஸ்தவ சமய கன்னியாஸ்திரிகள் மட்டக்களப்பிலிருந்து இங்கு வந்து பணியாற்றியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியசாலை 1907ல் இருந்து பரிணாம வளர்ச்சி கண்டது. வைத்தியசாலையின் முன்னைய முகப்பில் உள்ள 1909க் காட்டும் நடுகல் ஒரு முக்கிய நிகழ்வைக் குறிக்கிறது எனலாம். கல்முனை வைத்தியசாலை ஆதார வைத்தியசாலையாக (1962) தரம் உயர்த்துவதற்கு முன்னர் பணியாற்றிய ஓடலி - மருந்து கலப்பவர்களில் ஒருவர் (தற்காலத்தில் Pharmacist - பாமசிஸ்ட் எனலாம்) இராமக்குட்டி என்பவர் பாண்டிருப்பைச் சேர்ந்தவர். இவரின் தந்தை வைரமுத்து. இராமக்குட்டி 1896ல் பிறந்தவர். 1955ல் ஓய்வு பெற்று 1972ல் இறைபதம் அடைந்தவர். இவர் பாண்டிருப்பில் பிரபல்யம் அடைந்த திருமதி.K.லோகிதராஜா, திரு. கதிர்காமநாதன் ஆகியோரின் அம்மப்பாவாவார்.

கீழ் குறிப்பிடப்படும் ஓடலிமார்கள் சிறப்பாகப் பணியாற்றினர். ஓடலியின் பொறுப்பு மருந்து கலப்பதும், விநியோகிப்பதும். இன்றைய பாமசிஸ்ட் செய்யும் பணியையே அவர்கள் செய்தார்கள். இந்த வரிசையிலேயே திரு. தம்பிராசா நற்பட்டிமுனை தமிழ் பிரிவைச் சேர்ந்தவர். கல்முனையைப் பிறப்பிடமாக கொண்ட பெரிய தம்பி இன்னொரு ஓடலி. இவர் பாடசாலைகள் தோறும் சென்று பேதிமருந்து கொடுப்பவர்.

இவ்வைத்தியசாலையிற் பணியாற்றிய Dr. R.M.P. ஒருவர் கல்முனை நோக்கி புகையிரதத்தில் வந்த வேளையில் அடித்துக் கொலை செய்யப்பட்டார். இங்கு சிறப்பாக பணியாற்றிய DMOமார்கள் Dr.முருகேசுப்பிள்ளை, Dr.நல்லையா, Dr.லூதர், Dr.குலேந்திரன், Dr.அருளானந்தம், Dr.சஹீட், Dr.ஜெகநாதன், Dr.சலாக்கியநாதன், Dr.திருமதி.சிவநாதன் ஆகியோர்கள் முக்கியமானவர்கள். இவ்வைத்தியசாலையில் கடமையாற்றிய முஸ்லிம் பணியாளர் நற்பட்டிமுனை ஜனாப் சீனித்தம்பி அலியார் ஆவார்.

டாக்டர்மார் சேவை வரிசைப் பெயர்களை ஆங்கிலத்தில் தருகிறோம். Dr.M.Chellappa, Dr.Arunasalam, Dr.Luther, Dr.Arulanantham, Dr.Navaneetharajah, Dr.Salakiyanathan, Dr.Mrs.Sivanathan, Dr.Ponnusamy, Dr. Mahendralingam (Acting), Dr.Murugananthan, Dr.Paramanantham Dr.Agilan V.P (Act) along with Dr. M.Bahavan, Dr.Sasitharan (Act), Dr.Rajendran (Act), Dr.Jaufer, Dr.Lankathilaka Jeyasinghe (Act)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி K. லோகிதராஜாவின் கணவர் திரு. லோகிதராஜா. இவர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர். இவரின் தாய் மாமா (அம்மாவின் தம்பி. திருமதி கணேசலிங்கம்) நல்லையா ஆசிரியர். இவர் தேர்தலில் வெற்றியடைந்து D.S. சேனநாயக்காவின் அமைச்சரவையில் சுகாதார ஸ்தலஸ்தாபன அமைச்சராக விளங்கிய S.W.R.D. பண்டாரநாயக்காவின் பாராளுமன்றச் செயளாலராக (இக்காலத்தில் துணை அமைச்சர்) விளங்கினார். இக்காலம் 1947 - 1952. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியே திரு. நல்லையா எம்.பி. அவர்கள் கல்முனை ஆதார வைத்தியசாலையில் பிரதான கட்டடிடங்களை அமைத்தார். அட்டாளச்சேனை ஆசிரிய கலாசாலை, மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை, தற்போதைய மட்/ ஹிந்துக் கல்லூரி (கோட்டை முனை ம.வி.) போன்றவற்றை நிர்மாணித்தவர்.

**பௌதீக வளம் :**

உயர் திரு நல்லையா 1943ல் இடைத் தேர்தலில் போட்டியிட்டு இரண்டாவது தேசிய சபையில் திருகோணமலை மட்டக்களப்பு உறுப்பினரானார். இந்த பதவிகளின் மூலம் அவர் பெற்றுக் கொண்ட செல்வாக்குகளின் மூலமாகவே கல்முனை ஆதார வைத்தியசாலையின் தற்போதைய 1-4 வாட் (விடுதி) 1947-1952 அளவில் கட்டப்பட்டவையாக இருக்கலாம். பிரசவ விடுதியும், சமையலறையும் சமகாலத்தைச் சேர்ந்தவையாக இருக்கலாம். அப்போதைய O.P.D. இன்று E.T.U.வாக உள்ளது. மேற்கூறிய கட்டிடங்களை நிர்மாணித்தவர் திரு. நல்லையா என்பதில் சந்தேகமில்லை. அண்மைக் கலம் வரை இயங்கிய நிருவாகக் கட்டிடம் பின்பு கட்டப்பட்டதாகும். தற்போது நவீன வசதிகளுடன் புதிய நிர்வாக மாடிக் கட்டிடம் இரு நுழைவாயில்களைக் கொண்டு எழுந்துள்ளது.

1950களில் பிரேதப் பரிசோதனைக்காக இரண்டு தள்ளுவண்டிகள் இருந்தன. ஓடலிமார்கள் இருந்தனர். இவர்களில் ஒருவர் நட்பிட்டிமுனையைச் சேர்ந்தவர். மற்றவர் பாண்டிருப்பைச் சேர்ந்தவர் (Dr. திருமதி. K. லோகிதராஜாவின் அம்மப்பா). மருந்துக் கலவை என்பது ஒரு பாமசிஸ்ட்டின் பணியை ஒத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நிருவாகமே முக்கியமானது :

எந்தவொரு நிர்வாகத்தினதும் அச்சாணி அதன் முகாமைத்துவமே. இக்கட்டுரை ஆசிரியர் 1959 மே மாதத்தில் கல்முனை வந்தவர். கூகைக் கட்டு, பல்வலி, காய்ச்சல் காரணமாக சுமார் ஒரு மாதம் இடையீடிட்ட காலத்தில் கல்முனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அக்காலத்தில் டாக்டர் நல்லையா மற்றுமோர் பெண் டாக்டர் சிறப்பாகப் பணியாற்றினார்கள். பின்பு டாக்டர் அருளானந்தம் D.M.O.வாக இருந்தார். மிகச் சிறப்பான அர்ப்பணிப்புடன் கூடிய வைத்தியர். பின்னர் மட்டக்களப்பு பெரிய ஆஸ்பத்திரிக்கு M.S. பதவி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்முனை ஆதார வைத்தியசாலை சேவை மூலம் மக்கள் மனங்களில் தம்மை முதன்மைப் படுத்தியவர்களில் முக்கியமானவர்கள் டாக்டர் V. ஜெகநாதன் அவர்கள் என்பதில் எவருக்கும் சந்தேகம் தேவையில்லை. டாக்டர் V. ஜெகநாதன் அவர்களுக்கு உதவியாக டாக்டர் M.M சஹீட், டாக்டர் சிவ அன்பு (R.M.P.) இயங்கினர். மிக மிக சிறப்பான சேவை. இனம், மதம், மொழி என்ற எந்தப் பாகுபாடும் இல்லை. இவர்கள் மக்களின் நன்மதிப்பை பெற்றவர்கள். Dr. V. ஜெகநாதன் அவரது நிர்வாகத் திறமை காரணமாக சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகமாகவும், இக்கட்டுரை வரையும் வேளையில் சுகாதார அமைச்சின் ஆலோசகராகவும் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார் என்பது மிகவும் குறிப்பிடத் தக்க விடயமாகும். கல்முனை ஆதார வைத்தியசாலையில் Dr. V. ஜெகநாதனுக்குப் பின்னர் Dr. சலாக்கியநாதன் D.M.O. அவர்களின் காலத்திலும் நிர்வாகம் உயர்நிலை பெற்றிருந்தது.

பின்னர் நிர்வாகம் தளர்ச்சி அடைந்து வீழ்ச்சி நிலைக்குச் சென்று கொண்டிருந்தது. இதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் நிருவாகத்திற்குள் தலையிட முயன்றமையாகும். வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் பதவி வழித் தலைவர் D.M.O. வாக இருக்க வைத்திய துறையைச் சாராத பொது மகன் ஒருவர் தலைமை தாங்கியமையாகும். இதன் பின்னர் நாட்டில் நிலவிய யுத்த நிலமைகள் வைத்தியசாலை நிருவாகத்தைப் பாதித்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திய சாலைக்கு வரும் நோயாளர்களே அதன் எஜமானர்கள். ஆளணி முக்கியமானது. அவர்கள் தம் தொழில் வாண்மையில் திருப்தி அடைய வேண்டும். புதிய M.S மக்கள் மனம் கவரக் கூடிய வகையில் புதிய செயற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்துள்ளார். மக்கள் அனுசரணையுடனும், ஏனைய உயர் அதிகாரிகளினதும், அரசியலாளர்களினதும் நன்மதிப்புடனும் வைத்தியசாலையை 03 ஆண்டு காலத்தில் ஒரு பொது வைத்தியசாலையாக தரம் உயர்த்த முடியும், தரம் உயர்த்துவேன் எனத் திடமுடன் கூறினார்.

கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு நியமிக்கப்படும் அதியுயர் முகாமையாளர் அவ் வைத்தியசாலையின் பல்வேறு சவால்களை எதிர்கொள்ளக்கூடியவராக இருக்க வேண்டும். இந்த வகையில் சுகாதார அமைச்சு அண்மைக் காலம் வரையில் கவனம் செலுத்தவில்லை என்பது கட்டுரையாளரின் தேடல் ஆய்வு முயற்சியின்போது பல முக்கியப் பிரமுகர்கள் கூறினர்.

## கல்முனை ஆதார வைத்திய சாலையும், கல்குடாத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் வி.நல்லையாவும்

நல்லையா எம்.பி. (பொதுவாக நல்லையா மாஸ்டர் என்றே அழைக்கப்பட்டார்.) மட்டக்களப்போடும், கல்முனைப் பிரதேசத்தோடும் தொடர்புடையவர். புனித மிக்கேல் கல்லூரியில் இயேசு சபைத் துறவி போனல் அடிகளாரின் நல் மாணவரும், விபுலானந்த அடிகளாரின் மாணவரும் ஆவார்.

| | | |
|---|---|---|
| பிறப்பு. | : | 09-10-1909 |
| இறப்பு | : | 27-12-1976 |
| சேவைத் தளங்கள்: | | மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயம் (துணை அதிபர்), அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலை அதிபர் |
| கல்வித் தகைமை : | | பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர் (கொழும்பு), இலண்டன் பல்கலைக்கழக B.A பட்டதாரி (பாடங்கள் - ஆங்கிலம், வரலாறு, தமிழ்), சட்டத்தரணி |
| பதவி நிலைகள் | : | இரண்டாவது தேசிய சபையில் (Second State Council 17-03-1943 - 04-07-1947) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இடைத்தேர்தல் :**

| | | |
|---|---|---|
| தொகுதி | : | திருகோணமலை மட்டக்களப்பு தொகுதி |
| பதவிக் காலம் | : | ஆண்டு - 3 மாதம் - 7 நாட்கள் - 5 |
| முதலாவது பாராளுமன்றம்: உறுப்பினர் | | 11-10-1947 - 08-04-1952 சுயேட்சை |
| 2வது பாராளுமன்றம் | : | 09-06-1952 - 18-02-1956 |
| தொகுதி | : | கல்குடா |
| பதவிக் காலம் நாட்கள் - 21 | : | வருடம் - 4 மாதம் - 6 |
| கட்சி | : | ஐக்கிய தேசியக் கட்சி |
| சேவைக்காலம் | : | வருடம் - 3 மாதம் - 8 நாட்கள் - 23 |
| மொத்த அரசியல் சேவைக் காலம் | : | வருடங்கள் - 11 மாதங்கள் - 10 நாட்கள் - 19 |

**இக்காலத்தில் அவர் ஆற்றிய சேவைகள்**



1944ல் இலங்கை - இந்திய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காகப் புதுடில்லிக்கு பிரதம மந்திரி கௌரவ டி.எஸ். சேனநாயக்காவின் தலைமையில் தூதுக்குழு சென்றபோது திரு. நல்லையா அந்தக் குழுவின் முக்கிய உறுப்பினர். அங்கு அவர் வெளியிட்ட கருத்துக்களின் அடிப்படையிலேயே பின்னாளில் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் ஏற்பட்டது (1964) 20 வருடங்களுக்கு முன்னரே தீர்க்கதரிசனமாக திரு. நல்லையா 1944ல் வெளியிட்ட கருத்து மனம்கொள்ளத் தக்கது.

1943ல் அரசாங்க சபையில் திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தன சிங்களம் மாத்திரமே அரசாங்க பாஷை என ஒரு பிரேரணையைக் கொண்டு வருகின்றார். பிரபல பேச்சாளரான சொல்லின் செல்வன், கரும வீரன் நல்லையா சிங்களமும், தமிழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க மொழியாக வேண்டும் என்றார். அக்கருத்தை ஜே. ஆர். ஏற்றுக்கொள்கின்றார். 49 பேர் இதற்கு சாதகமாக வாக்களிக்க சட்ட மூலமாகியது. ஆனால் இச்சட்டம் அமுல் செய்யப்படவில்லை. அமுல் செய்யப்பட்டிருந்தால் இலங்கை மொழிப் பிரச்சினை எப்போதோ தீர்க்கப்பட்டிருக்கும்.

அட்டாளச்சேனை ஆசிரியக் கலாசாலை அதிபராக அவர் கடமையாற்றுகின்றார். அந்தக் கல்லூரியின் காணியை இலங்கைத் தேசியப் பேரவையின் உறுப்பினராக இருந்த கிழக்கிலங்கைப் பிரமுகர் மட்டக்களப்பு தெற்கு உறுப்பினர் சபாபதிப்பிள்ளை தர்மரெத்தினம் அவர்கள் அன்பளிப்புச் செய்தார். 1938ம் ஆண்டளவில் இந்த காணி நன்கொடை இடம்பெற்றிருக்கலாம். தமிழ் - முஸ்லிம் மாணவர்களைக் கொண்ட அந்தக் கல்லூரியில் வெள்ளிக் கிழமைகளில் மாட்டிறைச்சி சமைப்பதையிட்டுப் பிரச்சினை எழுந்தது. பிரச்சினைகளை மேலும் வளரவிடாது இன மோதல்களைத் தவிர்த்து மட்டக்களப்பில் தற்போதைய இந்துக் கல்லூரி முன்னை நாள் கோட்டை முனை மகா வித்தியாலய வளவில் ஆண் ஆசிரியர் பயிற்சிக்கென ஒரு கல்லூரியையும், பெண் ஆசிரியர் பயிற்சிக்கென வாடகை வீட்டினையும் பெற்று ஆசிரிய பயிற்சியை அளித்த பெருமை அவரையே சாரும். பின்னாளில் தொலைத் தொடர்பு அமைச்சராகி கிழக்கிலங்கையின் முதலாவது அமைச்சர் என்ற பெருமையை பெற்றுக் கொண்டார். மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை, மட்டக்களப்பு கோட்டைமுனை அரசாங்கக் கல்லூரி, வந்தாறுமூலை மகா வித்தியாலயம் போன்றவற்றை அமைத்த பெருமை அவரையே சாரும். மட்டக்களப்பு வைத்தியசாலையின் பௌதீக வளங்களை அதிகரித்து, ஆளணிகளையும் பெற்று அவ்வைத்தியசாலை பொது வைத்திய சாலையாக உயர வழிவகுத்தார்.

மட்டக்களப்பிலிருந்து பாதை வழியாக கொழும்பு செல்லமுடியாது. பதுளை சென்று கொழும்பு செல்லலாம். பாராளுமன்றத்தில் வாதாடி மன்னம்பிட்டி - பொலநறுவை பாதையை சீர் செய்து கொழும்பிற்கு பாதை அமைத்தவர் திரு. வி. நல்லையா அமைச்சர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்லிபுரம் நல்லையாவும், கல்முனை ஆதார வைத்தியசாலையும்

D.S. சேனநாயக்காவின் அமைச்சரவையில் சுகாதார நல ஸ்தாபன அமைச்சராக இருந்த திரு. S.W.R.D. பண்டாரநாயக்காவின் பாராளுமன்றச் செயலாளராக (தற்போதய உதவி அமைச்சர்) இருந்த திரு. V. நல்லையா அவர்கள் கல்முனை ஆதார வைத்தியசாலையின் முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் விடுதிகளுடன் பிரசவ விடுதியையும், தற்போதய சமையலறைக் கட்டிடத்தையும் அமைத்தார். கல்குடா பிரதிநிதி ஒருவர் D.S. சேனநாயக்காவின் (1947 - 1952) காலப்பகுதியில் கல்முனை தொகுதியில் ஆதார வைத்தியசாலையைக் கடடியெழுப்பினார் என்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விடயம் என்பதற்கு சான்றாகும்.

அட்டாளச்சேனை ஆசிரிய கலாசாலை அதிபராக இருந்து இப்பிரதேச மக்களின் சுகாதார அவலங்களைக் கண்டு சுகாதார அமைச்சின் பிரதி அமைச்சராக இருந்த வேளை இப்பிரதான சேவையை தற்போதைய ஆதார வைத்தியசாலைக்கு செய்திருக்கின்றார் என்பது வரலாற்று மைல் கல்லாகும்.

**இங்கு சேவையாற்றிய சிலர் :**

கல்முனையில் வெஸ்லியன் மிஷனரிமாரின் தொண்டு 1870ல் ஆரம்பமானது. 1872ல் G.B.S. பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. 1847ல் Ralph Stott மட்டக்களப்பு மெதடிஸ்த மிஷன் தலைவராக இருந்த காலத்தில் காராவூரில் (பின்பு கல்முனை) புதிய சேவைத்தளம் உருவாக்கப்பட்டது. அவர்களது வைத்திய சேவை மட்டக்களப்பு சேவைத்தளம் ஒன்று (சேகரம்), மட்டக்களப்பு தெற்கு கல்முனை சேகரம் 2 1887ல் விஸ்தரிக்கப்பட்டது. Dr. Miss. Gamble 07.02.1888ல் வைத்திய வகுப்புக்களை ஆரம்பித்து பயிற்றப்பட்டவர்கள் கல்முனையிலும் வைத்திய சேவைகள் ஆற்றியிருக்கின்றார்கள். சமூக சேவையுடன் வைத்திய சேவையை ஆற்றிய பின்வரும் இரு பெண்மணிகளும் வரலாற்றில் தடம் பதிக்கின்றார்கள். B.M. Clegg 1888 - 1937; Barbara Aitkins 1939 - 1973 சேவைக் காலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லையா கட்டிய விடுதிகள்

**கத்தோலிக்க கன்னியாஸ்திரிகளின் மருத்துவ சேவை :**

பிரான்ஸ் நாட்டைச் சார்ந்த பிரான்சிஸ்கன் கன்னியர்கள் 1886ல் இலங்கை வந்தனர். 1927ல் அவர்களது சேவை மட்டக்களப்பிற்கு கிடைக்கப் பெற்றது. அதற்கு முன்னரே கொழும்பிலிருந்து கல்முனைக்கு வருகை தந்து கல்முனை ஆதார வைத்தியசாலை அமைந்திருக்கும் இடத்தில் தொழுநோயாளர்களைக் கவனித்து வந்தனர். பின்னர் அவ்வைத்தியச் சேவை மட்டக்களப்பு மாந்தீவிற்கு மாற்றம் பெற்றது. மாந்தீவு தொழுநோயாளர் வைத்திய சேவை 1921ல் ஆரம்பிக்கப்பட்டது. இப்போதும் இதே சபையைச் சேர்ந்த அருட் செல்வி மக்டலீன் மாந்தீவில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆரம்ப வைத்தியராக உருவிலைச் சேர்ந்த முருகேசு செல்லப்பா மெதடிஸ்த மிஷனர்மாரின் பணிகளோடு தொடர்புடைய ஒருவரே என ஆதார வைத்தியசாலையின் ஒரு பதிவை எனக்களித்தவர் வைத்தியசாலையின் ஓர் ஆண் தாதியாகப் பணியாற்றிய திரு. நடேசன் ஐயா அவர்களாவார்.

ஆதார வைத்தியசாலையில் இன்றும் பாதுகாக்கப்பட்டிருக்கும் அடிக்கல் 1909ஐக் குறிக்கின்றது. இது வைத்தியசாலையில் நடைபெற்ற ஒரு முக்கிய நிகழ்வைக் குறிக்கின்றது எனலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு பணியாற்றிய வைத்தியர்கள் கால வரிசை சரிவர தெரியாது. பெருமாட்டி Dr. Clegg. (கிளர்க்கம்மா என்று அழைப்பார்களாம்) Dr. Hunt, Dr. Arunasalam, Dr. Niles, Dr. Meera lebbe (R.M.P. சம்மாந்துறையைச் சேர்ந்தவர்) Dr.கந்தையா, Dr. சீனித்தம்பி, Dr. M. முருகேசுப் பிள்ளை போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்

அண்மைக் காலத்தில் Dr.திருமதி.A.சிவநாதன், Dr. V. ஞானகுமார், Dr. K. பரமானந்தம், Dr. K.R. சசீந்திரன், Dr. திருமதி. T. குமுதினி, Dr.M.பகவான், Dr.M.அகிலன், Dr.K.முருகானந்தம், Dr.R.பாலசுப்ரமணியம், Dr. S. ராஜேந்திரா, ஆகியோர் மிகவும் கஷ்டமான காலங்களில் வைத்திய அதிகாரிகளாகப் பணிபுரிந்தமை கண்கூடு. உள்நாட்டு யுத்தம், அதனோடு தொடர்புடைய அச்சுறுத்தல் மத்தியில் இவ் வைத்தியர்கள் வைத்திய சேவையை ஆற்றியமையை மறந்துவிடலாகாது. தற்போதைய வைத்திய அதிகாரி (M.S.) Dr. M. S.M.ஜாபீர் அவர்களாவர். இவர் காத்தான்குடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

குறிப்பிடக்கூடிய வைத்திய பணியாற்றிய ஆண் தாதிகளுல் சுப்ரமணியம், நடராசா, செல்வம் (1978க்கு பின்பு) (முன்னர் மலேரியா தடுப்பு இயக்க கள உதவியாளர்), அழகையா பேரின்பராஜா (தற்போது அவுஸ்திரேலியா) ஆண்கள் பரிசாரகராக பணியாற்றிய பாண்டிருப்பு திரு.N. நாகலிங்கம், திருமதி. சிவ அன்பு, திருமதி.V. மாணிக்கவாசகர் ஆகியோர் மக்கள் மனதில் இடம்பிடித்துள்ளனர்.

மலேரியாத் தடுப்பு கள உதவியாளர்களாக பணியாற்றிய Dr. வில்லியம் தோமஸ், திரு.P.சண்முகம் சிறந்த சேவையாற்றியுள்ளனர். வைத்தியசாலையின் அபிவிருத்திச் வபை செயலாளராக பணியாற்றிய திரு. இராமக்கிருஸ்ணன் சிறந்த பணிகளை ஆற்றியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இக்கட்டுரையின் வரையறைகள் - Limitations

கல்முனை ஆதார வைத்தியசாலையின் வரலாறு மிக பழமையானதும் நீண்டதுமாகும். இக்கட்டுரை சில வரையறைகளுக்குள் சிக்கியுள்ளது.

1. கால அவகாசம் இரண்டு வாரங்களே.
2. வரலாற்று ஆவணங்களை முழுமையாகவும் முறையாகவும் முன்வைக்க முடியவில்லை.
3. பக்கங்களின் விரிவு அஞ்சி குறைக்கப்பட்டுள்ளது.
4. சில தவறுகளும் விடுகைகளுக்கும் பொறுப்பு கட்டுரையாசிரியரே.
5. கல்முனை தமிழ்ப்பிரிவு பிரதேச செயலாளர் அவர்கள் இக்கட்டுரையை வரைய அனுமதித்த அனுமதிக்கும் தமிழ்ப்பிரிவு செயலகத்தின் கலாசார உத்தியோகத்தர் எஸ். சுரேஸ்குமார் அவர்களின் ஒத்துழைப்பு, ஆர்வம் என்னை (கட்டுரையாசிரியர்) உற்சாகப்படுத்தியது.

*நேர்காணல்:*

**பெருமாட்டி இலக்கியச்செல்வி K. லோகிதராஜா**

**திரு. புவனேந்திரன் மதுரா**

**திரு. S. செல்வராஜா**

**ஜனாப் அலியார்.**

*(ஓய்வுநிலை மருத்துவப்பணியாளர், நற்பிட்டிமுனை.)*

**நடராஜா**

*(ஓய்வுபெற்ற தாதி)*

**ஆதாரங்கள் :**


- ☐ **அரசாங்க அன்சாட்**
- ☐ History of the Methodist Church. 1814 - 1964, (Wesley Press- Colombo)
- ☐ Archives - The Franciscan Missionary Sisters - Colombo
- ☐ The Hansard - Excerpts (1943 - 1956)
- ☐ 10th Parliament of Sri Lanka - Publisher Associated News Paper of Ceylon.
- ☐ புரட்சிகர அரசியல்வாதி - அமரர் நல்லையா - 31ம் நாள் நினைவு அஞ்சலி மலர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பின்வருவோர் நேர்காணலின் மூலம் தகவல்களைத் தந்தனர்**

- ☐ டாக்டர். வில்லியம் தோமஸ்
- ☐ திரு. நடராசா செல்வம்
- ☐ பெருமாட்டி K. லோகிதராஜா
- ☐ திரு. கதிர்காமநாதன்
- ☐ திரு. வ. சுப்ரமணியம் (ஓய்வு நிலை ஆசிரியர்), B.A. Dip. in. Edu. (நல்லையா வீதி, மட்டக்களப்பு.)
- ☐ திரு. ஏகாம்பரம், J.P. கல்முனை - 03
- ☐ திரு. ஜோன்சன் - பாத்திமா பவுண்டரி
- ☐ ஜனாப். சீனீத்தம்பி அலியார் - நற்பிட்டிமுனை.
- ☐ திரு. S.செல்வராஜா. M.O.H. வீதி - கல்முனை.
- ☐ திரு. அழகையா - ஓய்வு நிலை அதிபர், சேனைக்குடியிருப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய கல்முனை ஆதார வைத்தியசாலை

இன்று என நாம் குறிப்பிடுவது 27.09.2013 ஐக் குறிக்கும்.

ஆதார வைத்தியசாலைக்கு புதியதோர் எம்.எ. டாக்டர் பி.கெ.சி.எல். ஜெயசிங்க அவர்கள் அம்பாறை பொது வைத்தியசாலையின் அதிபர் கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு எம்.எ. ஆகவும் பதில் கடமையாற்ற நியமிக்கப்பட்டுள்ளார். இந்நியமனம் வெகு அண்மையில் நடைபெற்றது. கல்முனை ஆதார வைத்தியசாலை மேலும் சிறப்படைய இந்நியமனம் பெரிதும் உதவும் என நம்பலாம். இந்த நம்பிக்கை டாக்டர் ஜெயசிங்க அவர்கள் அம்பாறையில் ஆற்றிய மிகச் சிறந்த பணிகள் உதாரணமாக அமைகின்றன.

அவர் 2001ம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக அம்பாறை ஆதார வைத்தியசாலையை பொறுப்பேற்று அதன் வளர்ச்சிக்கு காலாக இருந்து பொது வைத்தியசாலையாக உயர பெரிதும் உழைத்திருக்கின்றார். சுகாதார அமைச்சு அவருக்கு உந்த இடமாற்றத்தையும் அவருடைய சேவையின் அத்தியாவசியம் குறித்து இடமாற்றம் செய்யவில்லை.

இரண்டு முக்கிய காரணங்களைத் தருகின்றேன். டாக்டர் ஜெயசிங்க அவர்கள் உத்தியோக ரீதியாக வெளி நாட்டிற்கு உயர் கல்வி நோக்கில் சென்ற போதெல்லாம் தாம் சந்தித்த ஏனைய நாட்டு வைத்திய சகபாடிகளும் அடிக்கடி விடுத்த வேண்டுகோள் காரணமாக 10 நாடுகளைச் சேர்ந்த வைத்திய நிபுணர்கள் தத்தம் நாட்டு வைத்தியசாலை ஊழியர்களிடமிருந்து சிறிது சிறிதாக திரட்டிய பணம் சுமார் 10 கோடி இலங்கை நாணயமாகும். இலங்கையிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் அலுவலகத்தின் அனுசரணையோடு மிகவும் தேவையான சி.ரி ஸ்கேன் கதிர் வீச்சு இயந்திரத்தை பெற்று சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் அம்பாறைக்குக் கொண்டு வந்தார். அது அவரது முயற்சி. அந்த முயற்சிக்கு உறுதுணையாக சுகாதார அமைச்சு கொங்கிறீட் பலம் வாய்ந்த ஆபத்து நிறைந்த கதிர் வீச்சு வெளியில் வராத வண்ணம் அதற்கான கொங்கிறீற் மண்டபத்தை அமைத்து கொடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தற்போது அம்பாறை மாவட்டம் முழுக்க மட்டுமன்றி தேவை ஏற்படும் பொழுது ஏனைய மாவட்ட தேவைகளும் சி.ரி.ஸ்கேன் செய்ய அம்புலன்ஸ்களில் அனுப்பப்படுகின்றனர். இந்த எக்ஸ்றேக்கு பெறுமதி சிகிச்சை பெறும் நோயாளிக்கு தெரியாமல்இருக்கலாம். எடுக்கப்பட்ட எக்ஸ்றேயின் பெறுமதி சுமார் பத்தாயிரம் ரூபாய் ஆகும். இங்கு இந்தச் சேவை பகலிலும் இரவிலும் நடைபெறுகின்றது. இச்சேவைக்கான கர்த்தா டாக்டர் ஜெயசிங்க அவர்களே. அகில இலங்கை ரீதியாக ஆண்டுதோறும் மிகச்சிறந்த அரச ஸ்த்தாபனங்களின் உயர் மட்ட நிருவாகிகளின் தெரிவும் பரிசும் வழங்கப்படுகின்றது. தொடர்ச்சியாக டாக்டர் பி.சி. ஜெயசிங்க அவர்கள் அம்பாரை மாவட்ட எம். எஸ் பதவியுடன் சிறந்த முகாமைத்துவ பணிகளில் ஈடுபட்டமையால் ஏழு முறைகள் அப்பரிசினை பெற்ற ஒருவர். நாட்டின் உயர் மட்டம் அவரை அம்பாந்தோட்டைக்கு அழைத்த போதும் அங்கு செல்ல விரும்பவில்லை.

அம்பாரை வைத்தியசாலை வளாகம் பல்வேறு அழகு தரும் விருட்சங்களை கொண்டு விளங்குகின்றது. பெருமளவிற்கு அந்த நிறுவனம் நவீனமயப்படுத்தப்பட்டிருக்கின்றது. வெளி நோயாளர் பார்வையிடும் முன்றலில் 15 தள்ளு வண்டிகள் புதிதும் பழையதுமாக காட்சி தருகின்றன. தாவர தோட்டத்தை பராமரிக்கும் தொழிலாளர்களை ரோதனை பூங்காவிற்கு அனுப்பி பயிற்சி பெறச் செய்துள்ளார். தான் அமெரிக்கா சென்றிருந்த போது அங்குள்ள விசேட தாவர குரோட்டன் வகை ஒன்றை மிக அதிக விலை கொடுத்து வாங்கி வந்து வைத்தியசாலை வளாகத்தில் மிகுந்த பராமரிப்புடன் வளர்த்து வெற்றி கண்டுள்ளார்.இத்தகைய தகைமை சார்ந்த ஒருவர் இக்கால கட்டத்தில் கல்முனை வைத்தியசாலையின் நிருவாகப் பொறுப்பை ஏற்றது அதிஸ்டமேயாகும். இவர் தமது முகாமைத்துவ காலத்தில் மனித நேயத்திற்கு அதிக முக்கியத்துவம் வழங்குகின்றார்.


கல்முனை வைத்தியசாலையைப் பொறுப்பேற்று இரண்டே மாதத்தினுள் ஆதார வைத்தியசாலைக்கு சிறந்த வெளிநோயாளர் கட்டிட தொகுதியை நிர்மானிக்கும் திட்டத்தை மேற்கொண்டுள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனை ஆதார வைத்தியசாலை முன்றலில் பெரியதோர் ஆலமரம் சுமார் 100 ஆண்டுகளை கண்டு கொண்டது மட்டுமின்றி தனது விழுதுகளோடு வேர்களை பிரதான வீதிவரை சென்று கட்டிடங்களுள் சென்று தன் நீர்ப் பசியை போக்கிக் கொண்டது. நிலமட்டத்திலிருந்து 20 அடிக்குக் கீழே தம்மை அத்திவாரமிட்டுக் கொண்டது. இனி அது இருந்து பிரயோசனமில்லை. புதிய ஆ.ளு அதன் பிரயோசனமற்ற நிலையை பொறியியலாளர்களுடன் நன்கு ஆலோசித்து பல லட்சம் ரூபாய்கள் செலவு செய்து மரத்தை அப்புறப்படுத்தி வேரோடு புடுங்கியது பாராட்டக்கூடிய விடயமாகும். வெட்டப்பட்ட மரத்தின் சில எஞ்சிய பகுதிகளை பின்வரும் படங்கள் காட்டுகின்றன. இது ஒரு வரலாறு அதனால் இந்தப் படங்கள் பிரசுரிக்கப்படுகின்றன. இந்த மரம் இருந்த இடத்தில் புதியதோர் கட்டிடம் நிர்வாகக் கட்டிடம் சீக்கிரம் உருவாகப்போகிறது. கல்முனை ஆதார வைத்தியசாலை தரமுயரப் போகிறது. நோயாளர் சேவை உயர்வடையப் போகிறது.

## வெட்டப்படும் மரத்தின் இரு தோற்றங்கள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Bro.S.A.I.Matthew,
159, SSJ Lane,
Kalmunai.
Sri Lanka.

மறுமலர்ச்சி சனசமூக நிலையம்
பொது நூலகம்
பதிவு இல...
AM/C
02-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1909இல் கல்முனை ஆதார வைத்தியசாலையில்
முக்கிய கட்டிடம் ஒன்று அமைக்கப்பட்டிருக்க வேண்டும்
நடுகல் அதனையே குறிப்பிடுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org